அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2023/2024

# தமிழ்

## ஆண்டு 9

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 16 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 – எழுத்து

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. நீங்கள் அழகான ஆடை அணிந்துள்ளீர்கள். இதில் அணிந்துள்ளீர்கள் என்பது
   1. தன்மை ஒருமை
   2. தன்மைப் பன்மை
   3. முன்னிலை ஒருமை
   4. முன்னிலைப் பன்மை

2. அமலை, வெறியாட்டு போன்ற ஆடல் வடிவங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள நூல்
   1. சிலப்பதிகாரம்
   2. கலித்தொகை
   3. தொல்காப்பியம்
   4. திருக்குறள்

3. கற்கின்றனர் என்பதன் இடைநிலை
   1. கிறு
   2. கின்று
   3. கல்
   4. அர்

4. காலாறுதல் என்னும் மரபுச்சொற்றொடர் குறிப்பது
   1. ஓய்வாக இருத்தல்
   2. கண்டிப்பின்றி நடத்தல்
   3. காலம் தாழ்த்துதல்
   4. தாழ்ந்து நிற்றல்

5. பெண்களுக்குரிய ஊரகக்கலை வடிவம்
   1. கரகம்
   2. கும்மி
   3. கோலாட்டம்
   4. காவடி

6. ஆட்டின் இளையது குட்டி போல மாட்டின் இளையது
   1. குட்டி
   2. கன்று
   3. குஞ்சு
   4. பிள்ளை

7. சொல்லியத்தின் இறுதியில் வரும் நிறுத்தற்குறியீடு
   1. முக்காற்புள்ளி
   2. அடைப்புக்குறி
   3. மெய்ப்பாட்டுக்குறி
   4. முற்றுப்புள்ளி

1 2 3 4

8. பகுதியையும் இடைநிலையையும் இணைப்பது
   1. விகுதி
   2. சந்தி
   3. மாறுபாடு
   4. சாரியை

9. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
   1. திருவள்ளுவர்
   2. யி.யு.போப்
   3. அல்பேட் சுவைட்சர்
   4. இளங்கோவடிகள்

10. அதிகாலையில் எழ வேண்டும். இதில் அதிகாலை என்பது
    1. இரவு
    2. நண்பகல்
    3. வைகறை
    4. நள்ளிரவு

11. பகாச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு
    1. காண்
    2. கலைஞன்
    3. கீழடி
    4. மணியொலி

12. ஐம்பெருங்காப்பியங்களுள் இல்லாதது
    1. சிலப்பதிகாரம்
    2. சீவகசிந்தாமணி
    3. மணிமேகலை
    4. திருக்குறள்

13. திருமந்திரம் என்ற சித்தர் நூல் தோன்றிய காலம்
    1. சோழர்காலம்
    2. பல்லவர்காலம்
    3. சங்ககாலம்
    4. சங்கமருவியகாலம்

14. கரடி கத்தும். அது போல நரி
    1. கனைக்கும்
    2. ஊளையிடும்
    3. உறுமும்
    4. குரைக்கும்

1 2 3 4

15. பார்த்தனன் என்பதன் சாரியை
   1. அன்
   2. பார்
   3. த்
   4. அனன்

16. தமிழீழத்தில் நானிலங்களையும் உள்ளடக்கிய பட்டினம்
   1. திருகோணமலை
   2. நெடுந்தீவு
   3. புங்குடுதீவு
   4. காரைதீவு

17. பாரி மன்னனின் அவைக்களப் புலவர்
   1. கபிலர்
   2. பரணர்
   3. நக்கீரர்
   4. காளமேகம்

18. முந்நூறு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. மூன்று + நூறு
   2. மூ + நூறு
   3. முந் + நூறு
   4. முந்து + நூறு

19. கோவலனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தவன்
   1. பொற்கொல்லன்
   2. மாசாத்துவன்
   3. பாண்டிய மன்னன்
   4. மாநாய்கன்

20. கோழி கொக்கரிக்கும். அது போல குருவி
   1. பேசும்
   2. கீச்சிடும்
   3. கூவும்
   4. அகவும்

21. கார்த்திகை பூத்துக் குலுங்கியது. இதில் வந்துள்ள ஆகுபெயர்
   1. பொருளாகுபெயர்
   2. இடவாகுபெயர்
   3. குணவாகுபெயர்
   4. காலவாகுபெயர்

22. தமிழுக்குக் கிடைத்த மணியாரம்
   1. சீவகசிந்தாமணி
   2. மணிமேகலை
   3. சிலப்பதிகாரம்
   4. வளையாபதி

1 2 3 4

23. மகிழ்ச்சி என்பதன் ஒத்தபொருட் சொல்
    1. உயர்ச்சி
    2. கெட்டது
    3. பகை
    4. களிப்பு

24. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
    1. சிரி
    2. நடி
    3. கட
    4. கரை

25. வினைமுற்றில் காலத்தை வெளிப்படையாகக் காட்டாத வினை
    1. குறிப்புவினை
    2. தன்வினை
    3. பிறவினை
    4. தெரிநிலைவினை

26. சைவ வழிபாட்டைப் போற்றிப் பாடியோர்
    1. நாயன்மார்
    2. ஆழ்வார்
    3. வைணவர்
    4. பல்லவர்

27. மல்லிகைப்பூ கமகம என மணந்தது. இதில் கமகம என்பது
    1. இரட்டைக்கிளவி
    2. அடுக்குத்தொடர்
    3. இணைமொழி
    4. அடுக்கிடுக்குத்தொடர்

28. மக்கள் அரசுக்குச் செலுத்துவது
    1. உணவு
    2. திறை
    3. உடை
    4. பரிசு

29. உயிர் முன் உயிர் புணர்தல்
    1. மணியொலி
    2. பூஞ்சோலை
    3. கீழடி
    4. பலாப்பழம்

30. தமிழில் கணினி அச்சுருவாக்கத்திற்குரிய முதல் தமிழ் மென்பொருள்
    1. கல்யாணி
    2. பாமினி
    3. ஆதமி
    4. மயிலை

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மாதவிக்குக் கிடைத்த பொன்மாலையை விலை கொடுத்து வாங்கியவர் யார்?

____________________________________________________

____________________________________________________

2. நாட்டுப்புறக் கலைகள் இரண்டு தருக.

____________________________________________________

____________________________________________________

3. சங்கமருவிய காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த இறைநெறிகள் எவை?

____________________________________________________

____________________________________________________

4. உலகக் காலநிலை மாற்றங்களுக்கு ஏதுவானவை எவை?

____________________________________________________

____________________________________________________

5. நடந்தனர் என்ற பகுசொல்லின் பகுதி, விகுதி என்பவற்றை எழுதுக.

பகுதி: ____________________ விகுதி: ____________________

6. க், ச் ஆகிய மெய் எழுத்துகளின் இனவெழுத்துகளை எழுதுக.

க்: ____________________ ச்: ____________________

7. ‘பவளம் போன்ற வாய்’ என்ற உவமை அணியில் வந்துள்ள உறுப்புகளை எழுதுக.

உவமானம்: ____________________ உவமேயம்: ____________________

உவமையுருபு: ____________________ பொதுத்தன்மை: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. மூவேந்தர்: ______________________________

______________________________

______________________________

2. வெந்நீர்: ______________________________

______________________________

______________________________

3. ஆடலரங்கம்: ______________________________

______________________________

______________________________

4. கூத்தர்: ______________________________

______________________________

______________________________

5. நெகிழி: ______________________________

______________________________

______________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

அழகிய மயிலே ! அழகிய மயிலே!
அஞ்சுகம் கொஞ்ச அமுத கீதம்
கருங்குயில் இருந்து விருந்து செய்யக்
கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்
தென்றல் உலவச், சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத்து ஊன்றி அங்கம் புளகித்து
ஆடுகின்றாய் அழகிய மயிலே!

- பாவேந்தர் பாரதிதாசன்

1. அஞ்சுகம் என்ன செய்கின்றது?

______________________________

2. கருங்குயில் என்ன செய்கின்றது?

______________________________

3. இங்கு எவை பாடுகின்றன?

______________________________

4. எதனால் சோலை சிலிர்க்கின்றது?

______________________________

5. மயில் எப்படி ஆடுகின்றது?

______________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

1. நேற்றுமாலை பெரும்புயற் காற்று வீசியது.
2. உலகம் அறிவியல் வளர்ச்சியை நோக்கி, முன்னேறிக் கொண்டு செல்கிறது.
3. பல நாடுகளில் மக்கள் போரினால் துன்பப்படுகின்றார்கள்.
4. பள்ளியிலிருந்து வந்த சிறுவர்கள் விளையாட்டுத் திடலில் விளையாடி மகிழ்கின்றனர்.
5. மாணவர்கள் இணையத்தளங்களைக் கல்விக்காகப் பயன்படுத்த வேண்டும்.

**வாழிடமொழி:**

1. ________________________________________

________________________________________

2. ________________________________________

________________________________________

3. ________________________________________

________________________________________

4. ________________________________________

________________________________________

5. ________________________________________

________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சிலப்பதிகாரம்
2. தமிழர் ஆடற்கலை
3. வாழிட நாட்டில் தமிழ்க்கல்வி

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - வாழிட நாட்டில் தமிழ் மொழியின் தேவை
   - எதிர் கொள்ளும் இடர்கள்
   - இளையோர் பங்களிப்பு

4. நீர் விரும்பிய தலைப்பில் கதை ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

இலக்கிய வரலாற்றில் செய்யுளே பழைமையானது. தமிழ், கிரேக்கம், இலத்தீன், சீனம், சமற்கிருதம் போன்ற மொழிகளில் பழைய இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. செய்யுளைத் தொடர்ந்தே உரைநடை தோற்றம் பெற்றது. உரைநடையும் செய்யுளும் எதிர் எதிர் முனைகளாகும். இன்று செய்யுள் வடிவம் உருமாறி, கவிதை என்ற பெயரில் உரைநடைப்பா தோன்றியுள்ளது. கவிதையும் உரைநடையும் காலத்தின் தேவை கருதி உருவாகியவையாகும். உரைநடைக்கும் கவிதைக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. உணர்ச்சியில் தோன்றுவது கவிதை. சிந்தனையில் எழுவது உரைநடை. கவிதை சுருங்கச் சொல்லும். உரைநடை விரித்து உரைக்கும். கவிதையால் அமைத்துத் தர இயலாத எளிமையையும் சிந்தனையையும் உரைநடை தருகிறது. உரைநடை குடிமக்களிடம் இலகுவில் சென்றடைகிறது. பொதுவாக உரைநடை என்பது மாந்தருக்குக் கிடைத்த அருட்கொடை எனலாம்.

1. இலக்கிய வரலாற்றில் பழைமையானது எது?

______________________________

2. செய்யுள் வடிவில் இலக்கியங்கள் அமைந்துள்ள மொழிகள் எவை?

______________________________

______________________________

3. செய்யுளைத் தொடர்ந்து தோற்றம் பெற்றது எது?

______________________________

4. காலத்தின் தேவை கருதி உருவாகியவை எவை?

______________________________

5. உரைநடைக்கும் கவிதைக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஒன்று எழுதுக.

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. விளம்பரத்தை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

**விளம்பரம்**

வளர் இணைய இதழ்!

- ஆண்டுக்கு நான்கு தடவை மலர இருக்கின்றது.
- இது தமிழ்மொழி ஆர்வலர்கள் எழுதும் இணைய இதழ்.
- புலம்பெயர் சூழலில் இருந்து எழுதுவோர் தங்கள் பட்டறிவுகளைச் சுவைபட எழுதலாம்.
- பல துறைகளில் அறிவியல் சார்ந்த விடயங்களும் மாணவர்களுக்குப் பயனுள்ள நல்ல விடயங்களும் இதில் வரவேற்கப்படுகின்றன.
- ஒவ்வொரு ஆக்கங்களோடும் அதற்கேற்ற ஓவியங்களும் இணைந்து வருவது இதழுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி valavan23@gmail.com

1. இணைய இதழின் பெயர் வளர். ( )
2. இந்த இதழ் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் மலர்கின்றது. ( )
3. பல நாடுகளில் உள்ள கல்விமான்களால் எழுதப்படுகின்றன. ( )
4. இதில் தங்கள் பட்டறிவுகளை எழுதுவதில்லை. ( )
5. அழகான ஓவியங்களும் இணைந்து வருகின்றன. ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |